

வேலூர் மாவட்ட அயலக அணி சிறப்பு கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் டி.லோகு தலைமையில் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். சேண்பாக்கம் பகுதி கழக செயலாளர் பி.முருகப் பெருமாள், மாமன்ற உறுப்பினர் சி.சந்திரசேகர் மற்றும் சுரேஷ் மாவட்ட அயலக அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் நகரத் தி. மு. க சார்பில் 116 வது அண்ணா பிறந்த நாள் விழா விருதுநகரில் நடைபெற்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச் சந்திரன் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , அருப்புக்கோட்டை சேர்மன் சுப்பாராஜ் விருதுநகர் நகர் தி. மு. க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன் , நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன்,யூனியன் சேர்மன் ராஜசேகரன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, பொதுக் குழு உறுப்பினர்கள் சுதாகர், மதியழகன், வை.மலை ராஜன், நேஷனல் கணேசன், நகர் மன்ற தி.மு.க தலைவர் காசிராஜன், கலையரசன் , ஓட்டுநர் அணி L., திருமாறன் , மரியராசு, மகளிர் அணி சுவேதா, வஹிதா ரகுமான், வி.வி.ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஒடுக்கப்பட்ட மக்களுக்கான

# உரிமைக் குரல் எழுப்பியவர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, செப்.18 -

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உரிமைக் குரல் எழுப்பியவர் முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான எஸ். எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 107-வது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நாட்டு விடுதலைக்காகவும், சமூக உரிமைகளுக்காகவும் பாடுபட்ட எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியாரின் பிறந்தநாள் இன்று.**

**பேரறிஞர் அண்ணாவோடும் முத்தமிழறிஞர் கலைஞரோடும் நெருங்கிப் பழகியவர் அவர்.**

**அவரது வாழ்வைப் போற்றி கிண்டி, ஹால்டா சந்திப்பில் தலைவர் கலைஞர் அமைத்த சிலைக்கு மலர் வணக்கம் செலுத்தினோம்!**

**ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைக் குரல் எழுப்பிய எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியாரின் பணிகளை நினைவுகூர்ந்து போற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை க.இராஜேந்திரன் வரவேற்புரை!

# பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி பண்ருட்டி நகர கழக பொது உறுப்பினர் கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்!

கடலூர், செப்.18 -

பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி பண்ருட்டி நகர கழக பொது உறுப்பினர் கூட்டம், 13.9.2024, பகல் 12 மணியளவில், கௌரி திருமண மண்டபத்தில், கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

பண்ருட்டி நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான க.இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரும், கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளருமான சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம்.தணிகைசெல்வம் ஆனந்தி சரவணன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஜி. கதிர்காமன், நகர அவைத் தலைவர் ஆர்.ராஜா, நகர பொருளாளர் ஆர்.கே.ராமலிங்கம், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட பிரதிநிதி பிரபு, சரவணன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணிசந்தர், மாவட்ட வர்த்தக அணி தலைவர் குணா, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மகாலிங்கம், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாரி, நகர துணை செயலாளர்கள் சீனிவாசன், சசிகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் லோகநாதன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஏழுமலை, செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத், துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர், பார்த்திபன், மதியழகன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் முன்னாள், இந்நாள், நகர மன்ற உறுப்பினர்கள் உட்கிளை செயலாளர்கள், வட்ட பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.


**தமிழ்நாடு அரசு - நெடுஞ்சாலைத்துறை**

**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம், செங்கல்பட்டு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.14/ 2024-2025/ முவதொஅ / நாள். 16.09.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் **கண்காணிப்புப் பொறியாளர்(நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், செங்கல்பட்டு வட்டம்,** அவர்களால் **ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகளை இதர மாவட்ட சாலைகளாக தரம் உயர்த்துதல் NABARD RIDF-XXX – 2024-2025** பணிகளின் கீழ் **செங்கல்பட்டு(நெ)** நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்திற்கான மூன்று தனிப்பணிகளுக்கும் இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **14.10.2024, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **20.09.2024** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர்(நெ)**
**நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம்,**
**செங்கல்பட்டு-1**

செ.ம.தொ.இ. / 3737 / ஒப்பந்தப்புள்ளி / 2024


### தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் இன்று (18.09.2024 - புதன்கிழமை) மாலை 4 மணிக்குக் கழக தகவல் தொழில்நுட்ப அணி அலுவலகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

பொருள் : 1. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள்குறித்து
2.கழக தகவல் தொழில்நுட்ப அணியின் ஆக்கப் பணிகள்

**அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் வாயிலாக HDPT சாலை முதல் குனிச்சி மோட்டூர் சாலை வரை 1.200கி.மீ ரூ.40.36 லட்சம் மதிப்பீட்டில் சாலை புனரமைப்பு பணியினை ஏ.நல்லதம்பி எம்.எல.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்.பிரேம்குமார், ஒன்றிய செயலாளர்கள் க.முருகேசன், கே.எ.குணசேகரன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், ஒன்றிய சேர்மன்.திருமதி திருமுருகன், மாவட்ட கவுன்சிலர் சி.கே.சுப்பிரமணி, துணை சேர்மன் ஜி.மோகன்குமார் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிருஷ்ணகிரியில் 30 ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி!

## அமைச்சர் அர. சக்கரபாணி தொடங்கி வைத்தார்! தே.மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, செப். 18 -

கிருஷ்ணகிரி ஆடவர் கலைக்கல்லூரியில் 30 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி , மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன்

கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், சட்ட மன்ற உறுப்பினர் டி.ராமச்சந்தி ரன் ஆகியோர் முன்னிலையில் 13.09.2024 துவக்கி வைத்து, 212 பயனாளிகளுக்கு ரூ. 4 கோடியே 33 இலட்சத்து 2 ஆயிரத்து 967 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

அனைத்து துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட அரசின் திட்டங்கள் குறித்த அரங்குகளை பார்வையிட்டு, பல்வேறு துறைகள் சார்பில் 212 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 33 இலட்சத்து 2 ஆயிரத்து 967 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக 30 கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கினார். தொடர்ந்து, பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதை பார்வையிட்டனர்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் சார்பாக 24 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 20 இலட்சத்து 54 ஆயிரம் மதிப்பில் கடன் உதவிகளும், வருவாய் துறை சார்பாக 28 பயனாளிகளுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டா ஆணைகளும், மாவட்ட வழங்கல் துறை சார்பாக 50 பயனாளிகளுக்கு புதிய மின்னனு குடும்ப அட்டைகளும், வேளாண்மைத்துறை சார்பாக 24 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சத்து 74 ஆயிரம் 950 மதிப்பில் வேளாண் இடுபொருட்களும், தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பில் காப்பீடு அட்டைகளும், ஊரக வளர்ச்சித் துறை சார்பாக கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பில் 54 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 89 இலட்சம் மதிப்பில் வீடு கட்டுவதற்கான ஆணைகளும், முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின் கீழ் தலா 1 இலட்சம் வீதம் 5 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் நிவாரண உதவி தொகையும், தோட்டக்கலைத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.31 இலட்சத்து 63 ஆயிரம் 704 மதிப்பில் சிப்பம் கட்டும் அறை, மாடி தோட்ட தொகுப்பு, நுண்ணீர் பாசனம், பசுமைகுடில் அமைப்பதற்கான மானிய தொகையும், வேளாண் பொறியியல் துறை சார்பாக 8 பயனாளிகளுக்கு ரூ.13 இலட்சத்து 61 ஆயிரத்து 713 மதிப்பில் சோலார் பேனல், விவசாய இயந்திரம் பெறுவதற்கான மானிய தொகையும், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.30 ஆயிரத்து 600 மதிப்பில் தையல் இயந்திரங்களும், கூட்டுறவுத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 18 ஆயிரம் மதிப்பில் பயிர் கடன் உதவிகள் என மொத்தம் 212 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 33 இலட்சத்து 2 ஆயிரத்து 967 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக தலா 6 கலைஞர்கள் வீதம் 30 கலைஞர்களுக்கு கலை முதுமணி, கலை நன்மணி, கலை சுடர்மணி, கலை வளர் மணி, கலை இளமணி ஆகிய விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் ஆட்சியர் வந்தனா கர்க் ., இணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) மா.இந்திரா, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் பச்சையப்பன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மணிமேகலை நாகராஜ்,

கிருஷ்ணகிரி மாவட்ட அவை தலைவர் நாகராஜ் , மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன் ,

மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம். வெங்கடேசன் , அரியப்பன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஷேக்.ரஷீத் ,

மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சாவித்திரி கடலரசுமூர்த்தி , பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் ,கிருபாகரன், செந்தில் ,பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் , நாகராசன் , நகர கழக செயலாளர் நவாப் ,ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன்,தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், அறிஞர் , குணவசந்தரசு, ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர் பாபு , தம்பிதுரை , வேங்கடப்பன் ,பர்கூர் தொகுதி பொறுப்பாளர்அன்பரசன் உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எஸ்.கே.பி.கருணா -துரை சரவணன் ஆய்வு

# வேலூர் மண்டல பொறியாளர் அணி கூட்டம்!

## ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

வேலூர், செப். 18 -

வேலூர் மண்டல திமுக பொறியாளர் அணியின் ஆய்வுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பொறியாளர் அணியின் மாநிலச் செயலாளர் கருணா, மாநிலத் தலைவர் துரை கி.சரவணன், மாநில துணைச் செயலாளர்கள் உமா காந்த், நரேந்திரன், பிரதீப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே.பி. கருணா பொறியாளர் அணியின் புதிய உறுப்பினர்களை இணைக்க QR Code அச்சிடப்பட்ட அட்டையை வழங்கி, பொறியாளர்களை புதிதாக இணைக்க ஆலோசனை வழங்கினார்.

பிறகு அனைத்து மாவட்ட மினிட் புத்தகத்தை ஆய்வு செய்தார். இதில் வேலூர் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.அசோக், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளர் ராம் காந்த், ராணிப்பேட்டை மாவட்ட அமைப்பாளர் சரவணன், மற்றும் திருப்பத்தூர் மாவட்ட அமைப்பாளர் சந்திப் ராஜ் மற்றும் பொறியாளர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டதலைவர் மாவட்ட துணைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நீலகிரி காந்தல்ராஜ்**
**செப்டம்பர் 18 (1981)**



**நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றியவர்.**

**நெருக்கடி நிலையை எதிர்த்து மிசா கைதியாக இருந்தவர்.**

**இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து நடைபெற்ற மறியலில் பங்கேற்று சிறையிலிருந்தபோது மரணமடைந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**